2008 மே 14] [திரு. தா.மோ. அன்பரசன்]

"2008 ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஐ) தொழிலக வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தொழிலக வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2008), மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தொழிலகக் வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

@ 14-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 19 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 19 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தொழிலக வேலை வாய்ப்பு (நிலை ஆணைகள்) தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2008) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் . . . (குறுக்கீடு) திரு. தி. வேல்முருகன், என்ன அடிக்கடி எழுந்து கேட்டுக் கொண்டிருக்கிறீர்கள்?

திரு. தி. வேல்முருகன்: இல்லை, இல்லை. இது தொழிலாளர்களின் முக்கியமான பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டிற்கானத் தொழிலக வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) சட்டத் திருத்தத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகச் சில கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இந்தச் சட்டத்தின்பிரகாரம், நம்முடைய நாட்டில் தொழிற்சாலைகளில் பணி செய்கின்றவர்களை apprentice என்ற பெயரில் 3 ஆண்டுக் காலம், 6 ஆண்டுக் காலம் என்று அவர்களைப் பணியமர்த்திக்கொண்டு, உற்பத்தியை அவர்கள் தொடங்குவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. இதிலே இத்தனை ஆண்டுகள்தான் வேலை செய்யவேண்டுமென்று இல்லை; மூன்று ஆண்டுகள் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இப்போது இந்தச் சட்டத்தின்மூலமாக, எத்தனை நாட்கள் அவர்கள் apprentice-ஆகப் பணிபுரிவதற்கு அனுமதிக்கப்படுவார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவைக்கு அளிக்கவேண்டும்.

மேலும், apprentice காலங்களில் பணி செய்கின்றபோதுதான், நிரந்தரத் தொழிலாளி செய்கின்ற உற்பத்தியை இவர்களை வைத்து அந்த நிறுவனம் தயாரிக்கின்றபோது, நிரந்தரத் தொழிலாளர்களுக்கும், apprentice தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் பிரச்சினை ஏற்பட்டு, அந்த தொழிற் தகராறு உங்களிடத்திலே வருகிறது. இதேபோன்ற பிரச்சினை N.L.C.-யிலும் இருந்து கொண்டிருக்கிறது. ஆண்டாண்டுக் காலமாக apprentice பயிற்சி முடித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு தருவதில்லை. M.R.F.-லும் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது; தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகளில் அந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. ஆக, பழகுநர்கள் என்பவர்கள் பயிற்சியினை முடித்தபிறகு, அவர்களை வெளியிலே அனுப்பிவிட்டு, நிரந்தரப் பணியாளர்களைக் கொண்டு உற்பத்தித் தொடங்கவேண்டும் என்கிற அளவிற்குத்தான் இப்போது இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

[2008 மே 14

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத் திருத்தம் நூற்பாலைகள் உட்பட எல்லா தொழில் நிறுவனங்களுக்கும் பொருந்தும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ளது. ஏற்கெனவே, நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர்களும், மற்ற அனைத்துக் கட்சித் தலைவர்களும் இதுகுறித்துப் பேசி ஒரு முடிவெடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

கோவை, பெரியார் மாவட்டங்களிலே அந்த ஆலைக்குச் சொந்தக்காரர்கள் பெண்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டு, அடிமைகளைப்போல நடத்தி, அங்கே ஒரு ஹாஸ்டலிலே தங்க வைத்து, மூன்று ஆண்டுகளுக்குப்பிறகு ஒரு கணிசமான தொகையைக் கொடுத்துவிட்டு, அவர்கள் தொழிலாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தையே மதிக்காமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தச் சட்டத்தை அடியோடு ஒழிக்க வேண்டுமென்பதற்காகத்தான், இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டு, Apprenticeship காலம் நிர்ணயம் செய்யலாம் என இச்சட்டத் திருத்தத்தில் கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக கொண்டுவரப்பட உள்ள விதிகளுக்கான திருத்தங்களில் Apprenticeship காலம் 6 மாதங்கள் என நிர்ணயம் செய்யப்பட உள்ளது. அந்தவகையிலே இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 2-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு ஆர். சின்னசாமி.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், பஞ்சாலைகளுக்கு மட்டும்தான் இந்தச் சட்டம் பொருந்தும் என்று சொன்னார்கள். அது உள்ளபடியே வரவேற்கத்தக்கது. பஞ்சாலைகளில்தான் இன்றைக்கு கொத்தடிமைகளாக வைத்து சம்பளம் கொடுக்காமல் திருமணத் திட்டம் என்ற பெயரால் மூன்று ஆண்டுகளுக்குமேல் வேலை வாங்கிவிட்டு, 30 ஆயிரம் ரூபாய், 40 ஆயிரம் ரூபாய் என்று கொடுத்துவிட்டு வீட்டுக்கு அனுப்புகிற நிலை இருக்கிறது. இந்தச் சட்டம் எந்தத் தேதியிலிருந்து அமலுக்கு வரும்? அது உடனடியாக அமல்படுத்தப்பட வேண்டுமென்பதை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகப் பதிவு செய்கிறேன்.

சட்டமன்றம் LEGISLATURE TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2008 மே 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, நான் இங்கே சொன்னக் கருத்தைத்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். சட்டமன்றப் பேரவையில் இச்சட்டத் திருத்தம் உங்களாலே நிறைவேற்றப்பட்டவுடன், ஓரிரு நாட்களிலே ஆளுநருடைய கையெழுத்திற்குப் போகும். அதன்பின், குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின்பு இச்சட்டம் அமலுக்கு வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஒ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2008

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2008), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2008 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2008)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

@ 13-5-2008 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS